# குடும்பங்களுக்கான ஆதரவு



## குடும்பங்களுக்கு ஆதரவளித்தல்

- பொதுச் சந்தையில் வீவக வீடுகளை வாடகைக்கு எடுக்கத் தகுதிபெறும் குடும்பங்களுக்கு, ஓராண்டு பயன்படுத்தவல்ல **பிள்ளைப்பேற்றுக்கான இடைக்காலக் குடியிருப்புத் திட்டப் பற்றுச்சீட்டு (பொதுச் சந்தை)**
- **முழுநேரக் குழந்தைப் பராமரிப்புச் சேவையின் மாதாந்தர கட்டண உச்ச வரம்பு** அரசாங்க ஆதரவு பெற்ற பாலர் பள்ளிகளில் 2025இல் குறைக்கப்படும்: முதன்மை நிறுவனங்களுக்கு $640; பங்காளி நிறுவனங்களுக்கு $680
- குறைந்த வருமானக் குடும்பங்கள் அனைத்துக்கும் நடப்பில் இருக்கும் **பாலர் பள்ளி நிதியுதவிகள்** மேம்படுத்தப்படும்



- இளம் பிள்ளைகளைக் கொண்டுள்ள குறைந்த வருமானக் குடும்பங்களுக்குப் பாலர் பள்ளிக் கல்வி, வேலை நியமனம், நிதி நிலைத்தன்மை ஆகியவற்றை மேம்படுத்தவும் வீட்டுரிமைக்குச் சேமிக்கவும் ஆதரவளிக்கும் **கொம்லிங்க் பிளஸ் முன்னேற்றத் தொகுப்புத்திட்டங்கள்**
- 2025 மதிப்பீட்டு ஆண்டிலிருந்து **சார்ந்திருப்போர் தொடர்பான தனிநபர் வருமான வரி நிவாரணத்திற்கான** வருடாந்தர வருமான உச்ச வரம்பு **$8,000**க்கு உயர்த்தப்படும்

## உடற்குறையுள்ளோருக்கு ஆதரவளித்தல்



- சிங்கப்பூர்க் குடியுரிமைப் பெற்ற, சிறப்புக் கல்விக்கான பள்ளி அல்லது மாணவர் பராமரிப்பு நிலையங்களில் பயிலும் சிறப்புத் தேவையுடைய மாணவர்களுக்கான கைச்செலவுகள் குறைக்கப்படும்
- பயிலரங்குகளும் பகல்நேர நடவடிக்கை நிலையங்களும் விரிவாக்கம் செய்யப்படுவதன்மூலம், வேலை நியமனம், சமூக ஒருங்கிணைப்பு ஆகிய அம்சங்களில் கூடுதல் ஆதரவு

go.gov.sg/sfyb2024

உங்களுக்கு எவ்வளவு ஆதரவு கிடைக்கக்கூடும் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்

BUDGET 2024

MOF MINISTRY OF FINANCE SINGAPORE

16 பிப்ரவரி 2024 நிலவரப்படி